னிஸ்டு கட்சியினுடைய மாநிலத் தலைவர் நல்லசிவன் அவர்கள் தான் அதற்குப் பரிந்துரை செய்து இருந்தார்கள். உடனடியாக பரலி சு. நெல்லையப்பர் அவர்களுடைய செல்வி திருமதி பூங்கோதை அம்மாள் அவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ரூபாய் 500 வழங்க இந்த அரசு ஆணையிட்டு வழங்கப்படுகிறது. எனவே அறிவிக்கப்பட்டு ஒருவேளை எல்லை காக்கும் போராட்டத்தில், நாஞ்சில் நாட்டைக் காக்கும் போராட்டத்தில் தியாகம் செய்தவர்களுக்கு அந்தத் தொகை தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறதா என்ற தகவல் இல்லை. அது உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால், தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசு அங்கீகாரம் பெறாத நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகள்.

* 2235. திரு. சோ. பால்ராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அங்கீகாரம் பெறாத அனைத்து நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளை அங்கீகாரம் செய்யும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இக்கருத்துரு அரசின் ஆய்வில் இருக்கின்றது.

(9 35)

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நர்சரி பள்ளியிலே இருக்கின்றவர்கள் ஐந்தாவது வரை படித்துவிட்டால் அங்கீகாரம் பெறாத காரணத்தால் அவர்களை ஆறாவது படிப்புக்குச் செல்கின்றபொழுது அங்கிருக்கின்ற பள்ளிகளில் இன்றைக்குப் பரீட்சை வைத்து அவர்களைச் சேர்க்கின்றார்கள். ஐந்தாவது வரை படித்துவிட்டு பாஸ் செய்துவிட்டு, மறுபடியும் ஆறாவது போகும்பொழுது அங்கீகாரம் இல்லாத காரணத்தால் அவர்களுக்குப் பள்ளியில் பரீட்சை வைக்கின்றபொழுது சிலபேர்கள் பெயில் ஆகிவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளியில் படிக்கின்றவர்களை ஆறாவது படிக்கச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளாக இருந்தால் கூட, இன்னொரு புதிய பள்ளிக்கூடத்திலே மேல் வகுப்பிலே சேர வேண்டுமானால் தேர்வு நடத்துகிற பழக்கம் பல பள்ளிக்கூடங்களிலே நடைமுறையிலே இருக்கிறது. ஒரே பள்ளிக்கூடத்தினுடைய துணைப் பள்ளிக்கூடத்திலே படித்தால்கூட தேர்வு நடத்தி எடுக்கின்ற முறை சென்னையிலே சில பள்ளிக்கூடங்களிலே இருக்கிறது. அது, அந்தந்தப் பள்ளிக்கூடத்தில் விண்ணப்பிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய எண்ணிக்கை குறைவாக இருக்கின்றபொழுது தேர்வு நடத்தி, சிறந்த மாணவர்களை எடுக்கின்ற பழக்கம் பல இடங்களிலே இருப்பதைத் தவறு என்று நான் கருதவில்லை. மற்றுமொன்று, அங்கீகரிக்கப்படாத பள்ளிக்கூடங்களிலே படித்த மாணவர்களைச் சேர்க்கக்கூடாது என்று எந்தத் தடையும் கிடையாது. எனவே, தேர்வு நடத்தி சேர்ப்பது தவறு அல்ல என்று நான் கருதுகிறேன்

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, இது மூலக் கேள்வியிலிருந்து கொஞ்சம் விலகி வருகிறது. இப்பொழுது டிரெயினிங் ஸ்கூல் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம்—கல்வி இலாக்கா கடுமையான நிபந்தனைகளை விதித்திருந்தது. அந்த நிபந்தனைகளைப்பற்றிக் கவலைப்படாமல் சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் யார் யார் அப்படி நடத்தி வந்தார்கள் என்பதைப் பார்த்தால், எந்தவொரு தகுதியும் இல்லாமல் பலயிடங்களிலே டிரெயினிங் ஸ்கூல் நடத்தப்பட்டு, அநியாயமான தொகை வசூலிக்கப்படுகிறது. அதைக் காவல் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்க கல்வி இலாக்கா முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் முறை தவறாகப் பலயிடங்களிலே நடைபெறுகிற காரணத்தால் அரசு அவற்றை அங்கீகரிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் என்று ஒரு ஆறு பள்ளிக்கூடங்கள் அங்கீகரிக்கப்பட்டு—அதிலேகூட இரண்டு

1989 நவம்பர் 1]

மூன்று பள்ளிக்கூடங்கள் அவ்வளவு தகுதியுடையதாக இல்லை என்பது பின்னர் காணப்பட்டு, அதற்கும்கூட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் எந்தவொரு பள்ளிக்கூடத்திலேயும், தாங்கள் அவர்களிடத்திலே நிதி கொடுத்து சேர வேண்டிய நிலைமையிருப்பதாகப் புகார் வருமானால், அந்தப் பள்ளிக்கூடம் அங்கீகரிக்கப்படாத பள்ளிக்கூடமாக இருந்தால் அந்தப் பள்ளிக் கூடத்தில் ஏராளமான நிதி கொடுத்து சேர்கிறோம் என்று திட்ட வட்டமான புகார் வருமானால் காவல் துறைக்கு அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்க முடியும். மற்று மொன்று, அங்கீகரிக்கப்படாத பள்ளிக்கூடங்களிலே படிக்கின்ற, பயிற்சி பெற்றதாகச் சொல்லிக்கொண்டு தேர்வு எழுத முனைகிற வர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்குவது இல்லை. ஆனால் நீதிமன்றம் மூலமாக அங்கே பயிற்சி பெற்றுவிட்டதாகத் தாங்கள் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு, அந்த மாணவர் களுக்கு நீதிமன்ற உத்தரவு காரணமாகத் தேர்வு எழுத அனுமதிக் கப்படுகிறது. அந்தத் தேர்வுக்குப் பின்னாலேகூட அவர்களுக்கு வழங்கப்படுகிற சர்டிபிகேட்—அவைகள் அங்கீகரிக்கப்படாத பள்ளியில் படித்துத் தேறியவர்கள் என்ற குறிப்போடுதான் வழங்கப்படுகிறது.

திருமதி பாப்பா உமாநாத்: தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்தில் ஏராளமான நர்சரி பள்ளிகள் இன்றைக்குத் தோன்றிக்கொண்டு இருக்கின்றன. ஆனால் அந்த நர்சரிப் பள்ளிகள் அந்தக் கல்வியை வர்த்தகமாக்கி வருவதை அரசு அறியும் என்று நான் நினைக்கிறேன். இன்றைக்கு அதிகமாக்கப் பட்டிருக்கக்கூடிய அந்த நன்கொடை என்ற பெயரால் வசூலிக்கப் படுவதைத் தடுப்பதற்கு அரசு அடிக்கடி சொல்லியும்கூட இன்றும் நடைபெறுகிறதே, அதைத் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை உண்டா என்பதையும் அல்லது அரசே ஏற்பதற்கு முயலுமா என் பதையும் அறிய விரும்புகிறேன்.

(9 40)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான நர்சரி பள்ளிகள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டு அந்தந்த வட்டா ரத்திலுள்ள மக்களுடைய தேவைகள், விருப்பங்கள், ஆதரவு ஆகியவற்றை வைத்து அவை வளர்ந்து கொண்டிருக்கின்றன.

அவற்றையெல்லாம் அரசாங்கம் எடுக்க வேண்டுமானால், உள்ள படியே அரசாங்கத்தின் பொதுநோக்கத்தில் கிராமப் பகுதி கல்வி வளர்ச்சியில் சில ஆண்டுகளாக ஏற்பட்டு வருகிற முன்னேற்றத் திற்காக ஒதுக்கவேண்டிய நிதிக்கே போதுமான நிதி கிடைக்காத தால் இனி வருங்காலத்தில்தான் ஒதுக்க வேண்டுமென்ற அவசியத் திலே இருக்கிறபோது, நாடெங்கும் இருக்கக்கூடிய பல்லாயிரம் தனியாருடைய சிறுசிறு பள்ளிகளையும் அரசாங்கம் ஏற்று முறைப்படி நடத்துவது என்பது இயலாத காரியம். இருந்தாலும் அவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் மூலமாக ஒரு கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அவற்றை முறைப்படுத்த, ஒழுங்கு படுத்த, வரன்முறைப்படுத்த வழி செய்ய முடியுமா? அதற்காக ஏதாவது சட்டம் கொண்டு வரலாமா என்று அரசு ஆய்வு செய்து வருகிறது.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 25,000-க்கும் மேற்பட்ட நர்சரி பள்ளிகள் இயங்கி வருகின்றன. பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் அவற்றில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள். நன்கொடை அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் இருந்தாலும் எல்லா பள்ளிகளிலும் அப்படிப்பட்ட குறைபாடு இருக்க வாய்ப்பில்லை. நான்கூட ஒரு நர்சரி பள்ளியை நடத்திக்கொண்டு வருகிறேன். அதிலே பிள்ளைகளை அனுமதிக்கும்போது எந்த நன்கொடையும் வசூலிப்பதில்லை. குறைந்த கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. இதைப்போல பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள்கூட நடத்திக் கொண்டு வருகிறார்கள். பொது நன்மையை முன்னிட்டு அவை களில் நன்கொடை அதிகம் வசூல் செய்யப்படுவதில்லை. இவை களை முறைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நர்சரி பள்ளிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள் நம்முடைய தமிழக அரசை அணுகி இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஒரு வரைமுறை ஏற்படுத்த வேண்டும். அதன்மூலமாக அரசாங்கத்திற்கு வருமானமும் கிடைக்கும். எனவே, இந்த கல்வி ஆண்டிற்குள் வரைமுறை சட்டங்கள் அம லுக்கு கொண்டு வரப்பட இருக்கின்றனவா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

1989 நவம்பர் 1]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னர் கூறிய விடையிலேயே அம்மையாருடைய வினாவிற்கும் விடை இருக்கிறது. அது ஆய்விலே இருக்கிறது. இப்படிப்பட்டவர்களையெல்லாம் எப்படி கட்டுப்படுத்துவது என்று தெரியாமல்தான் அரசாங்கம் தவித்துக் கொண்டிருக்கிறது. (சிரிப்பு).

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நர்சரி பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவதில் இருக்கிற சிரமங்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், ஏற்கனவே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு மத்திய தர குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு தங்களுடைய பிள்ளைகளை நர்சரி பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டுமென்ற ஆர்வம் மேலோங்கி வருகிற நிலையில், அவர்களிடமிருந்து அதிகமாக பணம் கறக்கப்படாமல் இருப்பதற்காக அரசாங்கம் பல்வேறு பகுதிகளில் தங்களுடைய பாலர் பள்ளிகளை, நர்சரி பள்ளிகளை உருவாக்குவதற்கு ஒரு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதை அரசாங்கத்தினுடைய கொள்கையாகச் சொல்லாமல், என்னுடைய அனுபவ உணர்வாகச் சொல்கிறேன். இருப்பதை ஒழுங்குபடுத்துவதற்கு நான் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன். நடப்பவைகளை செம்மையாக நடத்தி விட்டுத்தான் புதிய பொறுப்பைத் தாங்கிக்கொள்ள முடியும்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சில நர்சரி பள்ளிகளை நடத்துபவர்கள் விதிவிலக்காக இருந்தாலும்கூட, பொதுவாக தமிழ்நாட்டிலே நர்சரி பள்ளிகள் என்று இருப்பவை ஒரு இண்டஸ்ட்ரி போல, ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் என்று சொல்வதைப்போல, வருமானத்தை மட்டுமே மையமாக வைத்து நடத்தப்படுபவையாகத்தான் 100-க்கு 99 இருக்கின்றன. இதுதான் யதார்த்தமான உண்மை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது . . .

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே திருமதி எஸ். பி. சற்குணம் அவர்களின் பள்ளிக்கு விதிவிலக்கு உண்டா? (சிரிப்பு).

திரு. மு. இராமநாதன்: அதுபற்றி கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஆய்வு குழுவினர்தான் முடிவெடுக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது பாமர மக்கள், நடுத்தர மக்களுக்கு அங்கீகாரம் உள்ள பள்ளியா, அங்கீகாரமற்ற பள்ளியா என்ற விவரம் தெரியாத காரணத்தால், அங்கே ஏதோ உயர்ந்த கல்வி கிடைக்கிறது என்ற ஒரு மயக்கத்தில் அந்த கல்விக்கூடங்களை நாடிச் சென்று, பின்னால் உயர் கல்வியைப் பெறப் போகும்போது அங்கே வாய்ப்பு இல்லாமல் தவிக்கின்ற நிலை இருக்கிறது. அதையாவது கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் வழிவகையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(9-45)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இது குறித்துத்தான் ஆய்வு செய்யப்படுகிறது. ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களினுடைய நிர்வாகங்கள் தனியார் கையிலே இருக்கிறபோது, அந்த நிர்வாகத்திலே ஏற்படக்கூடிய குறைகளை அரசாங்கம் நேரடியாகக் களைய வாய்ப்பு கிடையாது. ஏதேனும் புகார்கள் வருமானால்தான், அதுவும் அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய விதிமுறைகளுக்கு மாறாக இப்படிப்பட்ட அநீதி நடைபெற்றது என்று சொன்னால்தான், அவை பற்றி நடவடிக்கை எடுக்க முடியும். மற்றொன்று அரசாங்கத்தின் சார்பிலும் மாநகராட்சி, நகராட்சி மன்றம், இவை சார்பாகவும் தொடங்கப்பட்ட பள்ளிகள் ஏராளமாக இருப்பதால், அவற்றை இன்னும் தரம் உயர்த்துகிறபோதுதான் இந்தச் சிக்கல் தீரும் என்று நான் நம்புகிறேன்.

திரு. எம். மோசஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குமரி மாவட்டத்திலே உள்ள ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் பல ஆண்டுக் காலமாக தனியார் கையிலேயும், தனியார் நிறுவனங்களிடத்திலேயும் இருந்து, அவற்றை இப்போது அரசாங்கம் ஏற்று இருக்கிறது. ஆனால் அந்தக் கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. நீங்கள் ஒதுக்கியிருக்கின்ற நிதி, அவற்றைச் செப்பனிடுவதற்குப் போதுமானதாக

[1989 நவம்பர் 1]

இல்லாமல் பற்றாக்குறையாக இருப்பதால், அநேகக் கட்டிடங்கள் அடுத்த மழையில் விழுமோ, அடுத்த காற்றில் விழுமோ, பிள்ளைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற நிலையிருக்கிறது. அநேக பள்ளிகளிலே பிள்ளைகள் மரத்தடியிலே பாடங்களைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ? அது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலைமை இன்னும் பல மாவட்டங்களிலே கூட இருக்கின்றன. புயலும், மழையும் வராமல் இருக்கவேண்டும் என்றுதான் கல்வி அமைச்சர் வேண்டிக்கொள்ள முடியும். ஆனால் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பாக, அப்படிப்பட்ட பாழடைந்த கட்டிடங்களை அவை இடிந்துவிடும் என்ற சந்தேகத்திற்கு இடமாக இருந்தால், அங்கு வகுப்புகளை நடத்தக்கூடாது என்று இந்தத் துறையின் சார்பாக, முதலில் பிள்ளைகளினுடைய பாதுகாப்பு கருதி அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அடுத்து கட்டிடங்கள் கட்டுவதற்கு, கடந்த காலத்தில் தொடர் முயற்சி இல்லாமல் போய்விட்டதன் காரணமாக ஒரு பெரிய முயற்சி, ஒரு பெரிய நடவடிக்கை தேவைப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்மைச்சர் அவர்கள் திரட்டக்கூடிய நிதி வசதியைப் பொறுத்து, வருகிற கல்வி ஆண்டிலாவது, இதில் முழு கவனம் செலுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கிற நர்சரி, பிரைமரி பள்ளிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசு அங்கீகாரம் பெற்ற பிறகுதான், நர்சரி, பிரைமரி பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவும், தடையும் விதிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏராளமாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், அவற்றை நாம் இப்போது குறுக்கிட்டு நிறுத்துவது என்பது பொதுமக்களுக்கு ஏற்பு உடையதாக இருக்குமா என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. புதிதாகத் தொடங்குவதற்கு விதிமுறைகளை அமைப்பது மூலம் வேண்டுமானால் செய்து பார்க்கலாம்.

TRUTH ALONE TRIUMPHS

அப்போதுங்கூட விதிமுறைகள் மீறப்படுவது ஏராளமாக இருக்கும் என்ற சந்தேகத்தின் காரணமாகத்தான் எப்படி இதை அணுகுவது என்பது ஆராயப்படுகிறது.

குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு அனுமதி.

*3390 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், குமாரபாளையம் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில், பெண்களையும் அனுமதிக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

குமாரபாளையம் ஆசிரியர் கல்லூரியில் பி.எட். வகுப்பில் மகளிர் சேர்க்கப்படுவதில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர் திரு. சீனிவாசன் கேள்விக்கு, கோர்ட்டிலேயிருந்து ஆணையிட்ட பிறகு, அவர்களை நாங்கள் அனுமதிக்கிறோம், சர்ட்டிபிகேட் கொடுக்கும்போது . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தீட்சிதர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். உங்களைப் போன்ற முன்வரிசையிலே இருப்பவர்கள், வினாவிற்குத் தொடர்பானவற்றைக் கேட்டால்தான் மற்றவர்கள் பின்பற்றுவார்கள். மூன்று வினாக்கள் ஏற்கெனவே 48 மணித்துளிகளை விழுங்கியிருக்கின்றன. இன்னும் 17 வினாக்கள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அடுத்து வினா எண் 2186.

காரைக்குடியைத் தலைநகரமாகக் கொண்டு தனி மாவட்டம்.

*2186 திரு. ராம நாராயணன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காரைக்குடியை தலைநகராகக் கொண்டு தனி மாவட்டம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?